## <u>சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்</u>

அசல் வழக்கு எண்.294/2024

நாள்: 15.10.2025

வா.சா. 1 – காமராஜ்

**<u>1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில்குறுக்கு விசாரணை</u>**

நான் 12 ஆம் வகுப்பு முடித்து விட்டு ITI படித்துள்ளேன். நான் ஆட்டோ ஓட்டுநராக சுமார் 5 வருடங்களாக உள்ளேன். நான் பெங்களூரில் 25 வருடமாக ஆட்டோ ஓட்டி வந்தேன். பெங்களூரில் இருக்கும்போது ஊருக்கு அடிக்கடி வந்து செல்வீர்களா என்றால் எப்போதாவது வருவேன். 25 வருடத்தில் 5, 6 முறை தான் ஊருக்கு வந்திருப்பேன். என் தாத்தா பெயர் பக்கிரிசாமி படையாட்சி. அவர் ஊடன் பிறந்தவர்கள் யார் யார் என்றால் சிங்காரு, இளஞ்சியம் ஆகியோர் பிறந்தார்கள். எனது தந்தையின் தாத்தா நடேச படையாட்சிக்கு 2 மனைவிகள். அவரின முதல் மனைவி மூலம் எனது தாத்தா பக்கிரி, சிங்காரு, இளஞ்சியம் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். 2 வது மனைவியின் வாரிசு 1ம் பிரதிவாதியின் கணவரான மாணிக்கம் ஆவார். என்னுடன் பிறந்தவர்கள் ராஜா, மதிமலர் செல்வி (எ) ராணி ஆகியோர்கள். என் அண்ணன் இறந்து சுமார் 10 வருடங்கள் ஆகும். என் அப்பா இறப்பதற்கு முன்பே என் அண்ணன் இறந்துவிட்டார். அந்த சமயத்தில் என் தாத்தா உயிருடன் இருந்தார். என்னுடைய தாத்தா பக்கிரிசாமி உயிரோடு இருக்கும்போதோ அவருக்கும் அவரது சகோதரர்களான மாணிக்கம், சிங்காரு ஆகியோர்களுக்கிடையே பாகம் பிரித்து தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய தாத்தா பக்கிரிசாமியும், என் தந்தையும் இறப்பதற்கு முன்பே 1ம் பிரதிவாதியின் கணவர் மாணிக்கம் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2 (FAC),
ஜெயங்கொண்டம்.